சுதந்திரன்
SUTANTIRAN

விலை: சதம் 60.  தொலைபேசி: 23411  நிறுவியது: 1947.

வள்ளுவர் ஆண்டு 2007 மாசி 24, ற.அவ்வல் 5 (7-3--76)ஞாயிறு  புத்தகம் 29, இதழ் 40

## கூட்டணி இளைஞர்கள் 'திடீர்' கைது!

கிளிநொச்சித்தொகுதியிலுள்ள தமிழர் கூட்டணி இளைஞர்கள் பலர் அண்மைக்காலமாக திடீர் திடீரென எதுவித காரணமுமின்றி பொலிசாரினால் கைது செய்யப்பட்டு வருகிறார்களாம். கிளிநொச்சியில் 'கண்' போட்டிருந்த 'திடீர்' பிறவியின் ஆசையில் படீரென இடி விழுந்ததன் பெறுபேறாகத்தான் இந்தத் திடீர் கைதுகள் நடைபெறுவதாக மக்கள் பேசிக்கொள்கின்றனர்.

# 'தனிநாடு' கோரிக்கை எழுவதற்கு கொடுங்கோன்மையே காரணம்!

## இந்தியப் பிரதமருக்கு லண்டனிலிருந்து கடிதம்!

தனிநாடுகோரிக்கை எழுவதற்கு கொடுங்கோன்மையும் சர்வாதிகாரமுமே காரணமென்று இலண்டனிலுள்ள தமிழர் இயக்கமான தமிழர் முன்னேற்றக்கழகம் இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்திக்கு அனுப்பி வைத்துள்ள கடிதம் ஒன்றில் குறிப்பிட்டுள்ளது. இந்தியத் தமிழகத்தின் அரசியல் நிலைதறித்து மேற்படி கழகம் இந்தியப் பிரதமருக்கு எழுதியுள்ள கடிதத்திலேயே இவ்வாறு சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது.

தமிழ் நாட்டில் ஜனாதிபதி ஆட்சியை கொண்டு வந்ததையும் திமுகழக ஆட்சியை நீக்கியதையும் கண்டித்து இந்தியப் பிரதமருக்கு எழுதப்பட்டுள்ள இக்கடிதத்தில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:-

"இந்திய யூனியனிலிருந்து பிரிந்து, தமிழ்நாடு கேரளம் ஆந்திரம் கா நாடகம் ஆகிய நான்கு மாநிலங்களையும் உள்ளடக்கிய ஒரு தனித் திராவிட நாட்டை உருவாக்கவேண்டுமென்பது திமுகழகத்தின் ஆரம்பகால இலட்சியமாக இருந்த போதிலும்—1962ம் ஆண்டு திமுகழகம்பிரிவினைக்கோரிக்கையை பகிரங்கமாகவே கைவிட்டு இந்திய யூனியனுக்குட்பட்ட மாநில சுயாட்சியையே தங்கள் இலட்சியமாகக் கொண்டு கடந்த மூன்று பொதுத் தேர்தல்களிலும் போட்டியிட்டுள்ளது.

"உங்கள் கொடுங்கோன்மை நிறைந்த சர்வாதிகார ஆட்சியினாலேயே, இந்தியாவின் வேறு பகுதிகளிலுள்ள இந்தியர்களைப் பின்பற்றி, இந்தியத் தமிழர்களும் சுதந்திரத் தமிழ்நாடு கோரிக்கையை முன்வைக்க வேண்டியஒருநிலைக்கு இன்று தள்ளப்பட்டிருக்கிறார்கள்!"

இவ்வாறு அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. இக்கடிதத்தின் பிரதிகள் தமிழக முன்னாள் முதல்வர் டாக்டர் கலைஞர் கருணாநிதி, ஆளுனர் கே. கே ஷா இந்திய ஜனாதிபதி பகுர்தீன் அலி, காமன் வெல்த் தலைவி எலிசபெத் அரசி ஆகியோருக்கும் அனுப்பப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

## தமிழர் கூட்டணி செயற்குழு கூடுகிறது!

தமிழர்கூட்டணியின் மத்திய செயற்குழுக் கூட்டம் 6ம் 7ம் திகதிகளில் யாழ்ப்பாணத்திலுள்ள கூட்டணியின் தலைமைச்செயலகத்தில் நடைபெறுகிறது. தற்போது அமுலிலுள்ள பத்திரிகைத் தணிக்கை பற்றியும், தமிழர் கூட்டணி மேற்கொண்டு எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் இங்கு விரிவாக ஆராயப்படவுள்ளது. இக்கூட்டம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது.

## தமிழர் கூட்டணியை தடைசெய்ய வேண்டுமாம்!

அவசர காலச் சட்டத்தின் கீழ் தமிழர்கூட்டணிக்கு தடைவிதிக்கும் சதித்திட்டம் ஒன்று திரைமறைவில் உருவாகி வருகிறதா? இந்தக் கேள்வி இந்த வாரம் அரசியல் வட்டாரங்களில் பரபரப்புடன் எழுப்பப்பட்டது.

இதற்குக் காரணம், அண்மையில் நடைபெற்ற ஆளும் கட்சியான சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டத்தில் இந்தவிஷயம் பிரஸ்தாபிக்கப்பட்டதுதான் என்று தெரிய வருகிறது:

தமிழரசுக்கட்சியையும், தமிழர் கூட்டணியையும் சட்ட விரோதமானவை யென்று கூறி அவற்றைத் தடைசெய்ய வேண்டுமென்றும், இப்படித் தடைசெய்வதன் மூலமே சிறிலங்கா சுதந்திரக் கட்சி தமிழர்கள் மத்தியில் தலையெடுக்க முடியும் என்றும் தேசிய ஒற்றுமையை உண்டாக்க முடியுமென்றும் பின்வரிசை உறுப்பினர்கள்சிலர் அங்கு வற்புறுத்தியதாகவும் இதில் சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் தமிழ்ப்பகுதி தலைமைத் தரகரே மும்முரமாக நின்றதாகவும் கூறப்படுகிறது.

எனினும், இதை உடனடியாகச் செய்வதற்கு சுதந்திரக் கட்சியின் தலைவியும் பிரதமருமான திருமதி பண்டாரநாயகா இணங்கவில்லையென்றும், நிலைமையை தான் கூர்ந்து அவதானித்து வருவதாகவும், தேவையான போது தேவையான நடவடிக்கைகளை தான் எடுப்பதாகவும் அவர் கூறியதாகவும் சொல்லப்படுகிறது.

## "தமது மொழியை பேணுவதில் தமிழர்கள் பிடிவாதமுள்ளவர்கள்!" கார்டியன் ஏடு கருத்து!

தங்கள் தாய்மொழியை பேணுவதில் தமிழர்கள் பிடிவாதமானவர் என்று இலண்டன் ஏடான கார்டியன் எழுதியுள்ளது. தமிழ் நாட்டு அரசியல் நிலை குறித்து அது 3—2—76 இதழில் எழுதியுள்ள விமர்சனத்திலேயே இவ்வாறுகுறிப்பிட்டிருக்கிறது. குறித்த விமர்சனக் கட்டுரையில் கூறப்பட்டிருப்பதாவது:—

"புதுடில்லியின் ஆட்சியை நீண்டகாலமாய் தமிழர்கள் எதிர்த்து வருகிறார்கள். தங்களின் தாய் மொழியைப் பேணுவதில் அவர்கள் கருராக உள்ளனர். அவர்களது மொழியும் கலாசாரமும் இந்திபேசும் வட இந்தியா [illegible]

"இந்தியாவின் சமஷ்டி அமைப்பையே அவர்கள் விரும்புகிறார்கள்.

"பல மொழிகள் உள்ள இந்தியாவில் பெரும்பான்மையான இடங்களில் பேசப்படும் ஒரே மொழி ஆங்கிலம் தான். அதை நீக்கி இந்தியை கொண்டுவர முயற்சித்த பொழுது சென்ற காலத்தில் பெரும் போராட்டங்கள் நடந்தன.

—5-ம் பக்கம் பார்க்க

**செய்தித் தணிக்கை அமுலுக்கு வந்து இன்று 33-வது நாள்!**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் ஈழத் தேசிய இனத்தின் விடுதலைக் குரல்

# தமிழ் இளைஞர்கள் சிறையிலிருக்கும்போது

# செல்வாவின் பிறந்த நாளை கொண்டாடலாமா?

ரி. அனுமான்,
நெடுங்கேணி.

கே: ஈழத் தமிழ் மக்கள் ஒருபோதும் மறக்க இயலாத, மறக்க முடியாத சம்பவம் எதுவென்று கூறுவீர்களா?

ப: 1974 சனவரியில் நடைபெற்ற நான்காவது உலகத் தமிழ் மாநாட்டு நிகழ்ச்சிகள்!

ஃ

தமிழ் செல்வி,
கொழும்பு.

கே: தியாகிகளுக்காக கட்டப்பட்ட நினைவுச்சின்னத்திற்கு செலவு செய்யும் பணத்தை ஏழைகளிற்கு கொடுத்து உதவலாம் என்று கூறுபவர்களுக்கு நீங்கள் கூற விரும்புவது என்ன?

ப: இரண்டும், இரண்டு வேறுபட்ட விடயங்கள்! ஏழைகளுக்கு உதவுவதற்காக தியாகிகளை மறக்க வேண்டுமா என்ன? ஏழைகளின் சொர்க்கம் என்று கூறும் சீனாவிலும் ரஷியாவிலும் எத்தனையோ நினைவுச் சின்னங்களும் சிலைகளும் கட்டப்பட்டுள்ளனவே!

ஃ

ஆ. விக்கினராசா,
ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

கே: சிறைச்சாலையில் நம் தமிழ் இளைஞர்கள் இருக்கும்போது தந்தை செல்வாவின் பிறந்த நாளைக் கொண்டாடுவது சரியாகுமா?

ப: தந்தை செல்வா ஒரு தனிமனிதரல்ல; தமிழ் இனத்தின் தேசியத் தலைவர்; தமிழ் மக்களின் இலட்சியங்களின் கூட்டுமொத்த உருவமே தந்தை செல்வா; எனவே தந்தை செல்வாவுக்கு எடுக்கும் விழா தமிழினத்தின் இலட்சியங்களுக்கு வலுவூட்டும் விழாவே தவிர தனிமனிதருக்கு எடுக்கும் விழாவன்று! சிறையில் தவமிருக்கும் இளைஞர்களைக் கேட்டாலும் இதையேதான் சொல்லுவார்கள்! எனவே தந்தை செல்வாவின் பிறந்த நாளை தமிழினத்தின் இலட்சியத் திருநாளாக கொண்டாடுவதில் தவறு இல்லை!

ஃ

செல்வி து. தேவிகாராணி,
மாதகல்.

கே: இன்றைய நவநாகரீக வனிதையர் பற்றி தங்கள் கருத்து யாதோ?

ப: துணிப்பஞ்சக் காலத்தைச் சரிக்கட்டத் தெரிந்த புத்திசாலிகள்!

கே: தமிழினத்தின் இலட்சியம் நிறைவேறும்போது தாங்கள் எந்த மேடையில் யார் பக்கத்தில் காணப்படுவீர்கள்?

ப: நிச்சயம் முதலாளித்துவத்தின் பக்கம் இருக்கமாட்டேன்!

கே: ஒழுக்கத்திற்கு தலை வணங்காதவர் யார்?

ப: ஒழுக்கமற்ற குடும்பத்தில் பிறந்தவர்கள்!

ஃ

க. அருளானந்தம்,
அம்பிளாந்துறை,
குருக்கள் மடம்.

கே: கட்சிக்குள்ளிருந்து கட்சிக்கே துரோகம் செய்பவர்களைப்பற்றி தாங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

ப: இவர்கள்தான் பயங்கரமான எதிரிகள்; உடன் பிறந்தே கொல்லும் வியாதிகள்; இவர்களைத்தான் 'உட்பகை' என்று வள்ளுவர் குறிப்பிட்டார். வெளிப் பகையைவிட உள்ளிருந்தே அழிக்கும் இந்த 'உட்பகை' எந்தக்கட்சியிலும் இருக்கக் கூடாது; அப்படிப்பட்டவர்களை இனங்கண்டு வெளியேற்றுவது கட்சியை நடத்திச் செல்வோரினதும், பொதுமக்களினதும் கடமையாகும்!

ஃ

அ. சண்முகநாதன்,
பாண்டிருப்பு—2.

கே: மட்டு நகரிலே காடைத்தனமாக கன்னித்தமிழ் மக்களை ஏமாற்றும் காடையனுக்கு என்ன பரிசு கொடுக்கலாம்?

ப: ஒரு சேலைத்தலைப்பை கொடுங்கள் — அதில் பிடித்துத் தொங்கட்டும்! அல்லது தூங்கட்டும்!

கே: தமிழக அரசு கலைக்கப்பட்டுவிட்டது; திமுகவுக்கும் தடை வருமா? அப்படி வந்தால் தமிழர் நலனை அ. தி. மு. க. பாதுகாக்குமா?

ப: திமுகவுக்கு தடை வந்தால் அதன் பின்னர் அ. தி. மு. க. தப்பிப் பிழைக்கும் என்று எதிர்பார்க்கிறீர்களா? கருணாநிதியை தள்ளி விழுத்திய பின்னர், அடுத்த குறி எம். ஜீ. ஆர். மீதுதான் பாயும்!

ஃ

லோகேஸ்வரி,
ஐயனார் கோவிலடி,
யாழ்ப்பாணம்.

கே: தமிழர் கூட்டணியின் இலட்சியத்துக்கு விரோதமாக மேடைகளில் பேசி வரும் திரு. கே. டபிள்யூ. தேவநாயகம், இன்னும் கூட்டணியில்தான் இருக்கிறாரா?

ப: இல்லை — அவர் என்று தமிழர் கூட்டணியின் இலட்சியங்களுக்கு விரோதமாகப் பேசத் தொடங்கினாரோ அன்று முதல் அவர் கூட்டணியில் அங்கத்தவராக இருக்கும் அருகதையை இழந்துவிட்டார்!

ஃ

வண்ணையூரான்,
வண்ணார்பண்ணை.

கே: தமிழ் மக்களின் அபிலாஷைகளுக்கு விரோதமாக நடப்பவர்களை நீங்கள் எவ்வளவு தூரம் கண்டித்தும் அவர்கள் திருந்துவதாக இல்லையே...—?

ப: நாய் வாலை எப்படி நிமிர்த்த முடியும்?

கே: நீங்கள் கொஞ்ச நாட்களுக்கு வாயை மூடிக் கொண்டிருந்தால் என்ன?

ப: தமிழன் ஒவ்வொருவனும் தன்னை உணர்ந்து தனது உரிமைக்காகத் துணிச்சலுடன் தானே பேசத் தொடங்கிவிட்டால், நான் வாயை மூடிக்கொள்வேன்! அதுவரை என் வாயும் மூடாது; என் பேனாவும் ஓயாது!

ஃ

எஸ். ஏ. விஜயன்,
4ம் கட்டை,
ஆனைக்கோட்டை.

கே: புலிக்கும், புயலுக்கும் என்ன வித்தியாசம்?

ப: கருணாநிதிக்கும், இந்திராகாந்திக்கும் உள்ள வித்தியாசம் தான்! புலி, பொறுத்திருந்து பதுங்கி சமயம் வரும்போது பாயும்; ஆனால் புயலோ திடீரென வந்து சில மணிநேரம் பலமாக வீசிவிட்டு அத்துடன் ஓய்ந்துவிடும்!

ஃ

ச. க. சிவலிங்கம்,
கரிபட்டமுறிப்பு,
மாங்குளம்.

கே: குமார் ரூபசிங்காவின் தமிழ்ப் பத்திரிகை வாரம் தவறாமல் தமிழர் கூட்டணியையும், சுதந்திரனையும் வைது தீர்க்கிறதே—நீங்கள் ஏன் பேசாமல் இருக்கிறீர்கள்?

ப: வற்றிய ஓலை கலகலக்கும் — என்றும் பச்சோலைக்கில்லையொலி! குறைகுடங்கள் தழும்பட்டும் — நாம் நிறைகுடம் — தழும்பமாட்டோம்!

ஃ

வி. என் சுரேந்திரகுமார்,
இறம்பைக்குளம்,
வவுனியா.

கே: "தமிழ் மக்கள் அசாங்கத்தை ஆதரித்தால் மகாவலிகங்கை வடக்கே நோக்கிப்பாயும்" என்று அண்மையில் குமாரசூரியர் கிளிநொச்சியில் பேசியிருக்கிறாரே—இது பற்றி என்ன கூறுகிறீர்கள்?

ப: கங்கை நீரில் அவித்தாலும்—தனது பருப்பு கிளிநொச்சியில் வேகாது என்பதை குமாரசூரியர் விரைவில் அறிந்துகொள்ளுவார்!

ஃ

ச. இரவீந்திரன்,
அராலி வடக்கு,

கே: தமிழினத்தின் இலட்சியம் நிறைவேறுவதற்கு அஹிம்சை வழியா அல்லது வேறு வழியா சிறந்தது?

ப: தற்போதைக்கு அஹிம்சைதான்!

ஃ

கு. பரமேஸ்வரன்,
நயினாதீவு.

கே: யாழ்ப்பாணத்தில் ஒரு சுவரில் தமிழ்—சிங்கள ஒற்றுமை உருவாகட்டும் என்று தமிழில் பெரிதாக எழுதப்பட்டுள்ளது. இதை எழுதியவரைப்பற்றி தங்கள் கருத்தென்ன?

ப: என்னதான் ஒருமைப்பாடு மாநாடுகள் நடத்திய போதிலும் அந்த ஒற்றுமை உருவாகவேண்டிய நிலையில் இன்னும் வெறும் கற்பனையாகவேயிருக்கிறதென்பதைத்தான் அதை எழுதியவர் கோடிட்டுக் காட்டியிருக்கிறார் போலும்!

ஃ

இ. கல்யாணி,
நீர்கொழும்பு.

கே: தமிழினத்தின் அபிலாஷைகள் பூர்த்தியடையும்போது நீர்கொழும்பு போன்ற இடங்களில் வாழும் தமிழர்களின் நிலைமை என்ன?

ப: அவர்களும் தலை நிமிர்ந்து வாழ முடியும்.

ஃ

எம். இராசகுலேந்திரன்,
யாழ்ப்பாணம்.

கே: இன்றைய சூழ்நிலையில் பத்திரிகை நடத்துவது சுலபமானதா?

ப: அரசாங்க 'கெசட்' போல வெளியிடுவது; அல்லது ஆபாச சினிமாப்பத்திரிகை நடத்துவது — மட்டுமே சுலபமானது!

கே: நீங்கள் முன்பு போல அதிகமாகக் கூட்டங்களில் கலந்துகொள்வதாகத் தெரியவில்லையே...!

ப: ஆமாம், உங்கள் சிந்தனைக்கு உணவு தயாரிப்பதில் அதிகமாக ஈடுபடவேண்டியிருப்பதால் செவிக்குணவு தரமுடியவில்லை. ஒவ்வொரு வாரமும் இரு தடவைகளும் மாதமொரு தடவையும் சுதந்திரன்—சுடர் ஏடுகளின் சுகப்'பிரசவத்தை'கவனிக்க வேண்டியிருக்கிறதே!

ஃ

அல்வை தர்மநாதன்,
'தமிழகம்'
உருத்திரபுரம்.

கே: தமிழினத்தின் மத்தியில் சாதிப்பாகுபாடு காட்டுபவர்களுக்கு ஈழ அரசு என்ன தண்டனை கொடுக்க வேண்டுமென்று நீங்கள் நினைக்கிறீர்கள்?

ப: என்னைப் பொறுத்தவரை மரண தண்டனை கொடுத்தாலும் எனக்கு அது சம்மதமே!

ஃ

ப: சிவஞானசெல்வம்,
கொக்கட்டிச்சோலை.

கே: தளராத நெஞ்சமும் உறுதியான எண்ணமும் உங்களுக்கு இருக்கிறது. உங்கள் எண்ணத்தை பகற்கனவு என்று கூறுபவர்களுக்கு நீங்கள் என்ன கூறுகிறீர்கள்?

ப: நாம் விழித்திருந்தபடியே தீட்டும் திட்டங்கள்; உருவாக்கும் சிந்தனைகளே பகற் கனவு எனப்படும். காந்தியும், நேருவும், கவிஞன் இக்பாலும், ஜின்னாவும், இன்னும் பலரும் நம்மைப் போல இவ்வாறு பகற்கனவு கண்டவர்களே! பகற்கனவுதான் நிச்சயம் பலிக்கக் கூடியது; இரவில் காணும் கனவுதான் பெரும்பாலும் பலிப்பதில்லை!

ஃ

செல்வி வே. விமலாம்பிகை,
முதலைக்குடா.

கே: தங்களின் இல்லத்திற்கு விருந்தாளியாக திருமதி சிறிமா அம்மையார் வந்தால், நீங்கள் சூடாக உபசரிப்பீர்களா? அல்லது குளிராக உபசரித்து வழியனுப்புவீரா!

ப: எதிரியாக இருந்தாலும், விருந்தாளியாக வீட்டுக்கு வருபவர்களை வரவேற்று உபசரிப்பது தமிழனின் பண்பு. 'செல்விருந்து ஓம்பி — வருவிருந்து காத்திருக்கும்' வள்ளுவத்தின் வழியில் நடப்பவன் நான்!

கே: உங்களை இரண்டு சிங்கள யுவதிகள் காதலிக்கிறார்களாமே, உண்மையா? தங்களிடம் ஒரு கெட்ட பழக்கமும் இருப்பதாக கூறுகிறார்கள். இதுவும் உண்மைதானா?

ப: என்னை வேறு யாராவது காதலிக்கிறார்களா இல்லையா என்பதை அறிவதில் என் மனைவிக்கு இல்லாத அக்கறை உங்களுக்கு ஏன்? என்னிடமிருக்கும் ஒரேயொரு 'கெட்ட பழக்கம்' அனாவசியமாகவும் அளவுக்கதிகமாகவும் 'வழவழா' என்று யாருடனும் பேசாமலிருப்பதுதான் என்று நண்பர்கள் கூறுகிறார்கள்!

ஃ

காரை திலகா
கொச்சிக்கடை

கே: தமிழர் கூட்டணி பா. உ.களில் உங்களின் உள்ளத்தைக்கவர்ந்தவர் யார்?

ப: தந்தை செல்வா!

● கேள்விகள் அனுப்புவோர் அஞ்சலட்டையில் பின்வரும் முகவரியை வெட்டி ஒட்டி அனுப்ப வேண்டும்.

திருவாளர் குயுக்தியார்,
194 ஏ. பண்டாரநாயக்க வீதி,
கொழும்பு-12.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொத்துவில் சுற்றுலா!

அன்பு நண்பா,

கீழைத் தென் கோடித் தமிழ் ஈழத்தின் கடைசிக கிராமம் பொத்துவில்; பாணர்கள் வாழ்ந்து இசை மீட்டியதால் 'பாணமைப் பற்று' என வழங்கப்படும் பழம்பெரும் பகுதியைச்சேர்ந்த ஊர்; பொங்கியெழும் கடலலைகள் ஓவென்ற பேரிரைச்சலுடன் கரையைத் தொட்டுத்தழுவித்தாலாட்டிட—கள்ளங்கபடமற்று வாழும் அவ்வூர் மக்களின் உள்ளம் போல வெண்மணற் பரப்பு ஊருக்குத் தனி எழில் தந்திட—புகழ் மண்டிக்கிடந்திடும் ஊர் பொத்துவில். சிவநெறியும், செந்தமிழுணர்வும் நிறைந்த இவ்வூரில், இஸ்லாமியத தமிழர்களும, இந்துத் தமிழர்களும் இணைபிரியா நண்பர்களாக இன ஒருமைப்பாடு காத்திடும் பாங்கு மெச்சத் தகுந்தது; போற்றிடக் கூடியது.

இந்த ஊருக்கு என்னை அழைத்திடுவதில், அங்குள்ள துடிப்புள்ள இளைஞர்கள் கடந்த சில மாதங்களாகவே படாத பாடுபட்டு வந்திருக்கிறார்கள்; அவர்கள் அங்கு என்னை அழைத்திடும் ஒவ்வோர் சமயமும, எனக்கு ஒவ்வொர் தொலலை வந்து அங்கு போக முடியாமல் என்னைத் தடுத்து வந்தது. இந்த ஆர்வமிக்க இளைஞர்களின் உற்சாகம், என்ஞல் அவமாகிவிடக்கூடாதே யென்கிற கவலையெனக்கு! இருந்தபோதிலும், சுதந்திரன் கிழமைககு ஒரு இதழாகிய பின்பு — அத்துடன் கூடா இலககியப்பணியும் சேர்ந்து —எனது வெளியூர்ப் பயணங்களுக்கு ஒரு தடையாகவே இருந்து வருகிறது!

என்ருலும் — இந்த ஆண்டு சிவராத்திரி விழாவிற்கு எப்படியும் பொததுவிலுக்கு வந்தேயாகவேண்டும் என்று ஒரு திங்களுக்கு முன்பே எனக்கு கட்டளையிட்டுவிட்டார்கள் பொத்துவிலில்வாழும்முத்தனைய நம் தம்பிகள். இந்த இளைஞர் பேரவை எனும் அமைப்பின் கீழ் தமிழ்த் தொணடும், சமூகாயத்தொண்டும், சமயத் தொண்டும் ஆற்றிவரும் பொத்துவில் இளைஞர்களின் உணர்ச்சிக்கு தலைவணங்கி இந்த சிவராத்திரியன்று (28-2-76) பொத்துவிலுக்குச்சென்றிருந்தேன். என்னுடன், நண்பா ஈழவேந்தனும, தமிழ் இளைஞர்பேரவை கொழும்புககிளையின் தலைவராக பணியாற்றும் தம்பி ரகுபதி பால சிறீதரனும் என்னுடைய மனைவியும் வந்திருந்தார்கள்!

அங்கு சென்ற பிறகுதான்—எத்தனை துன்பங்களுக்கு மத்தியில் எத்தனை நெருக்கடிகளுக்கு மத்தியில்—எத்தனை எதிர்ப்புக்களுக்கு மத்தியில்—தமிழுணர்ச்சியை அங்கே நமது இளைஞர்கள் அழிந்துவிடாதபடி கட்டிகாத்து வளர்த்து வருகின்றனர் என்பதை என்ஞல் புரிந்துகொள்ளமுடிந்தது. அவர்களது வைர நெஞ்சமும் கொள்கை யுறுதியும், தமிழுணர்ச்சியும், தளராத வேகமும் எனது பயணக் களைப்பையெல்லாம் போக்கடித்தன. ஆம், மட்டக்களப்பிலிருந்து சுமார் எழுபத்துமூன்று மைல்கள் பேருந்தில் பிரயாணம் செய்து பொத்துவிலையடைந்தபோது ஏற்பட்ட களைப்பு—எங்கள் தங்க நிகர் தமிழ் இளைஞர்களின் முகத்தில் பொங்கிய புன்னகையை கண்டவுடன் எங்கோ மறைந்து விட்டன!

பொத்துவிலுக்கு கடினமான பயணத்தை மேற்கொண்டு சென்றிருந்த எங்கள் நால்வருடன் ஐந்தாவது நபர் ஒருவரும் அழையாவிருந்தாளியாக எம்முடன் வந்திருந்தார். "எள்ளேன் காய்கிறது எண்ணெய்க்கு—எலிப்புழுக்கை ஏன் காய்கிறது, கூடக் கிடந்த குற்றத்துக்கு" என்று சொல்வார்களே—அதே போல சிவராத்திரிவிழாவுக்கு சென்றிருந்த எம்முடன், பாவம், அந்த மனிதரும் கஷ்டப்பட்டு வந்து சேர்ந்தார். பாவம், அவர் வேறு யாருமல்ல—எம்மைப் பின் தொடர — எமது பேச்சுக்களைக் குறிப்பெடுத்து நாலாவது மாடிக்கு அனுப்பி வைக்க எம்முடன் அம்மையார் ஆட்சியால் அனுப்பிவைக்கப்பட்ட சி.ஐ.டி. பொலிஸ்காரர்தான் அவர்! பாவம் நம்மால் இந்த மனிதரும் வீணுக அலையவேண்டியிருக்கிறதே என்ற பச்சாத்தாபம் ஒரு புறம் எனக்கு ஏற்பட்டாலும் — நம்மால் அவருக்கு மேலதிக வருமானம் (பட்டா) கிடைக்கிறதே என்பதனுல் மகிழ்ச்சியுமடைந்தேன்!

நாம் கலந்துகொள்ளும் சமய விழாவானுலும் சரி—இலக்கிய விழாவானுலும் சரி—கலாசார விழாவானுலும் சரி—ஏன் நம்குடும்ப நிகழ்ச்சிகளானுலும் சரி—சி.ஐ.டி. பொலிசார் மோப்பம் பிடித்து அலைந்து கொண்டிருக்கிறார்கள்! எங்கே ஒரு 'பிடி' கிடைக்கும்— அதைச் சாட்டாகக்கொண்டு 'உள்ளே' தள்ளிவிடலாம் என்கிற அங்கலாய்ப்புடன் நம்மை அவர்கள் சுற்றித்திரிகிறார்கள். இது நமக்கு நன்ருகத் தெரியும்!

நான் அங்கே அந்த சி. ஐ. டி. பொலிசுக்குக் கூறினேன் — நீங்கள் வாங்குகிற சம்பளத்துக்கு உங்கள் கடமையை செய்யுங்கள்; நாங்களும் எம் இனத்துக்கும், மொழிக்கும் நாட்டுக்கும் ஆற்ற வேண்டிய பணிகளை துவளாது தொடர்ந்து ஆற்றுவோம்'என்று கூறினேன்!

ஆம் நண்பா, வருவது சொர்க்கமானுலும் நரகமானுலும்— வாழ்வென்ருலும் தாழ்வென்ருலும் — எழுச்சியென்ருலும் வீழ்ச்சியென்ருலும் — இன்பமென்ருலும் துன்பமென்ருலும்—எங்கள் சமுதாயத்தின் நல்வாழ்வுக்காகநாம் செய்யவேண்டிய கடமைகளைச் செய்துகொண்டேயிருப்போம்! இதற்காக எங்கள்வாழ்வையே ஒப்படைத்து விட்டவர்கள் நாம்!

ஆசிரியர் பேரானந்தம் தலைமையில் நடைபெற்ற சிவராத்திரி விழாவில் பேசிய தம்பி ரகுபதி பாலசிறிதரன், "பொய்மையாளரைப் பாடாதே" என்ற சுந்தரர் தேவார அடிகளைத் தலைப்பாகக்கொண்டுகாலத்துக்கேற்ற அருமையான உரை நிகழ்த்திஞர். தமிழ் மக்கள்—சைவ மக்கள்—பொய்மையாளர் யார்—உண்மையாளர் யார் என்பதைப் புரிந்துகொண்டு, உண்மையின்பக்கம் நிற்கவேண்டும்—உண்மை வெல்ல உழைத்திடவேண்டுமென்பதை ஆணித்தரமாக அடித்துக் கூறிஞர்!

## அரசியல் மேடை

ஒரு நாய் உலகத்தைச் சுற்றிவந்தது; அப்படிச் சுற்றிவந்த பின்னர் இன்னோர் நாய் அதனிடம் கேட்டதாம்— "உலகம் சுற்றிவந்தாயே, உன்னை யாரும் ஒன்றும் செய்யவில்லையா?" என்று; அதற்கு உலகம் சுற்றிய நாய் பதிலளித்ததாம் — என் சாதியைச் சோந்தவர்களே என்னைப்பார்த்துக் குரைத்தார்கள்—வேறு யாரும் என்னை எதிர்க்கவில்லையென்று கூறியுதாம்! இந்தக்கதையைக் கூறிய தம்பி ரகு, இது எமது இனத்துக்கும் பொருந்தும் என்று கூறியபோது இளைஞர்கள் பொருளுணர்ந்து அதை வரவேற்றனர்

'நற்றமிழ் வல்ல ஞானசம்பந்தன்' எனும் தலைப்பில் பொருள் பொதிந்த உரையாற்றிய நண்பர் ஈழவேந்தன்—தமிழ் மொழிகொண்டு தமிழ் மக்களை இணைத்தவர் ஞானசம்பந்தர் என்றும், எங்கும் தமிழ் எதிலும் தமிழ் என்பதே ஞான சம்பந்தரின் முழக்கமென்றும்—ஈனர்களுக்கு அஞ்சாது தெய்வத்தைத் துணைகொண்டு தமிழினம் தனது கடமைகளைச் செய்யவேண்டுமென்பதே ஞானசம்பந்தன் காட்டிச்சென்ற நன்னெறியென்றும் எடுத்து விளக்கிஞர்.

"இலட்சிய வாதிகள் வெஞ்சிறைக் கொடுமைக்கும் வேறு எத்தகைய துன்பத்துக்கும் அஞ்சி ஓடிவிடமாட்டார்கள்; பயந்துபணிந்து விடமாட்டார்கள் — என்பதையே நாவுக்கரசரின் வாழ்க்கை எடுத்துக் கூறுகிறது. கல்லுடன் பிணைத்துக் கடலிலே வீசியபோதும் சரி—சுண்ணும்புச்சிறையினிலே தள்ளிசித்திரவதைப் படுத்தியபோதும் சரி—கொலை யானையை ஏவிவிட்டபோதிலும் சரி—எதற்கும் அஞ்சாமல், சித்தம் குலையாமல் தெய்வத்தை—அறத்தை துணைகொண்டு தலைநிமிர்ந்து நின்றவர் அப்பரடிகள். இந்தியத் துணைக் கண்டத்தில் தோன்றிய முதலாவது சத்தியாக்கிரகி—அறப்போர் வீரர்—அப்பரடிகளே! எதையும் தாங்கும் இதயம் கொண்ட அப்பரடிகள் "நாமார்க்கும் குடியல்லோம்...பணிவோம் அல்லோம்!" என்று உறுதியுடன் பாடுகிருர்! "அஞ்சுவயாதொன்றுமில்லை—அஞ்சவருவதும் இல்லை" என்று நெஞ்சு நிமிர்த்திப் பாடியவரும் அவரே! அப்பருக்குப் பின் வந்த மணிவாசகரோ—இன்னும் ஒருபடி மேலே சென்று—யாமார்க்கும் குடியல்லோம் யாது மஞ்சோம் — என்று பாடுகிருர்! அப்பரும், மணிவாசகரும் பெற்றிருந்த இந்த ஆன்மீக வீரம் நம் தமிழ் மக்களுக்கு வரவேண்டும்' யாமார்க்கும் குடியல்லோம் — யாதும் அஞ்சோம்! என்று மணிவாசகரும், நாமார்க்கும் குடியல்லோம் பணிவோம் அல்லோம் என்று நாவுக்கரசரும் கூறி வைத்த அந்த தேவார திருவாசக அடிகளே என்றென்றும் தமிழனின் ஆன்மீக முழக்கமாக இருந்திடவேண்டும்! விடுதலை விடுதலை என்பதே—அதாவது ஆன்மீக விடுதலையே—இந்து மதங் காட்டுகின்ற வழி! 'வீடு பெற நில்' என்பது ஔவை வாக்கு. இதன்பொருளுணர்ந்து சைவ மக்களும் தமிழ் மக்களும் தொண்டாற்ற வேண்டும்!"

மேற்கண்டவாறு "நாமார்க்கும் குடியல்லோம்" எனும் தலைப்பில் நான் அங்கு உரையாற்றியபோது குறிப்பிட்டேன்.

மறு நாள் (29-2-76) ஞாயிற்றுக்கிழமை காலை பொத்துவிலில் உள்ள உணர்ச்சிமிக்க இளைஞர்கள் ஒன்று கூடி ஓர் கருத்தரங்கை நடத்தினர். இளம் பெண்களும் கலந்து கொண்ட இக்கருத்தரங்கில் நானும், ஈழவேந்தனும், ரகுபதியும் உரை நிகழ்த்திஞேம்.

தமிழ் சமுதாயத்தின் ஒற்றுமையை வலியுறுத்தியும்— தமிழினத்தின் அபிலாஷைகள் நிறைவேறிட நாம் ஆற்றிடவேண்டிய பணிகள் பற்றியும், இயக்கத்தில் இளைஞர்களின் பங்குகுறித்தும்— நாம் அங்கு விரிவாக எடுத்துக் கூறிஞேம். தமிழன் யாருக்கும் தாழாமல் யாரையும் தாழ்த்தாமல் வாழவேண்டுமென்பதே தமிழர் கூட்டணியின் இலட்சியம் என்பதை அங்கு தெளிவுபடுத்திஞேம்! இக்கருத்தரங்குக்கு திரு. டி. எஸ். சதாசிவம் தலைமை தாங்கிஞர்! இக்கருத்தரங்கின் முடிவில் தமிழ் இளைஞர் பேரவை கிளை யொன்றையும் அங்கு நிறுவிக்கொண்டனர்.

நமது இயக்கத்தில் இளைஞர்களுக்கு மட்டும் தாஞ இடம்? எங்களுக்கில்லையா என்று, கேட்டு "சண்டைக்கு" வந்தஒரு சகோதரியிடம் தமிழ் மகளிர் பேரவையே பெண்கள் இயக்கமாக இயங்குகிற தென்றும், மகளிர் பேரவையின் செயலாளர் திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் அங்கு வரும்போது மகளிர் பேரவைக் கிளையை நிறுவ ஏற்பாடு செய்யும் படியும் கூறி விட்டுத் திரும்பிஞேம்!

மட்டக்களப்பிலிருந்து தெற்கே பொத்துவில் வரை நீண்டு பரந்து கிடக்கும் வளமான நிலம்—பசுமையான நிலம் — காணியற்ற தமிழர்களை வா வா என்று அழைக்கிற காட்சி கண்டோம். பொன் கொழிக்கக்கூடிய அந்தப் பூமியைத் திருத்தி —நாட்டு வளம் பெருக்கிட —அதன் மூலம்' கேடுகள் வருமுன்னரே அது வராமல் நிறுத்திட — தீமைகள் வாராமல் முன் கூட்டியே தடுத்திட — முன்வராமல் ஏன் தான் தமிழினத்தார் இழித்தவாயர்களாகிக் கிடக்கிருர்களோ தெரியவில்லை! வந்த பின்னர் அவதிப்படுவதைவிட, வருமுன் காத்திடும் முறையை ஏன் தமிழ் மக்கள் மறந்தாபோய் விட்டார்கள்?

நீர் நிலைகள்—நெஞ்சையள்ளும் வாவிகள்—குளிர்தருசோலைகள்—குருவிகள்,கொக்குகள் புள்ளினங்கள்—பயிர்கள்பச்சைகள்-புதுமணப் பெண்போற் தலை சாய்த்து நின்றிடும் நெற்கதிர்கள்—கனி தருமரங்கள்— கடல் தருவளங்கள் இவைபோன்ற இன்ப நிறை காட்சிகளை மட்டக்களப்புமுதல்பொத்துவில் வரைபோன வழியெல்லாம் கண்டேன்; புளகாங்கிதமடைந்தேன்; இது எனது மண்—எனது சொந்த மண் —எனது தாயகத்து மண் — என்கிற நினைப்பு எழுச்சியையும் இன்பக்கிளுகிளுப்பையும் தந்தது. —"விதியே விதியே தமிழச் சாதியை என் செயக்கருதியிருக்கிருய்?" என்ற பாரதிபாடலும் உடனே நினைவுக்கு வந்து துன்ப நினைவுகளையும் பெரு மூச்சையும் கூடவே உண்டாக்கியது!

என்ருலும்—பொதுவாக பொத்துவில் சுற்றுலா மகிழ்ச்சியையும், எழுச்சியையும் புத்துணர்வையும் தந்தது! பொத்துவில் தமிழ் இளைஞர்களின் பணியும் உற்சாகமும் போற்றத்தக்கது. தமிழன் எங்கிருந்தாலும் தமிழனுகத் தான் வாழ்வான் என்பதை பொத்துவில் இளைஞர்கள் உறுதிப்படுத்திவருகிஞர்கள். அவர்கள் தொண்டு வாழ்க! வெல்க!

உன் அன்புத் தோழன்'

கோவை-மகேசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எண்ணம்

## வெளிநாட்டுப் பிரச்சாரம்!

இலங்கைத் தமிழர் பிரச்சினையைப்பற்றி தமிழரசுக் கட்சியும் தமிழர் கூட்டணியும் வெளிநாடுகளில் பிரசாரம் செய்து வருவது அரசுக்குத்தெரியும் என்று வெளி விவகார பாதுகாப்பு துணையமைச்சர் திரு. லக்ஸ்மன் ஜெயக்கொடி அழுது வடித்திருக்கிறார்!

இலங்கைத்தமிழர்களுக்கு பிரச்சினை ஏதும் கிடையாதென்றும் தமிழர்களின் உரிமைகள்யாவும் வழங்கப்பட்டு விட்டதாகவும் இதுவரை பறைதட்டி வந்தவர்கள், இப்போது முதன்முதலாக 'இலங்கைத் தமிழர் பிரச்சினை' என்று ஒன்று இருப்பதை பகிரங்கமாக ஒப்புக்கொண்டு விட்டார்கள்.

இலங்கைத் தமிழர் பிரச்சினை இன்னும் தீர்க்கப்படவில்லையென்பதையும் ஏற்றுக் கொண்டுவிட்டார்கள்:

அவர்களுக்குள்ள கோபமெல்லாம்— இந்தப்பிரச்சினையை வெளிநாடுகளில் தமிழர்கூட்டணி எடுத்துக்கூறி வருவதுதான்!

தமிழர்களின் பிரச்சினையை— கோரிக்கைகளை—அபிலாஷைகளை தமிழர் கூட்டணி எடுத்துக்கூறிய போதெல்லாம், அதைக்காதில் போட்டுக்கொள்ள மறுத்த ஆட்சியாளர்கள்— இந்தப்பிரச்சினையை உலக மேடையில் தமிழர் கூட்டணி எடுத்துவைத்த பிறகுதான் இப்போது அவதிப்படுகிறார்கள், ஆலாய்ப்பறக்கிறார்கள்; அங்கலாய்த்து நிற்கிறார்கள்!

இலங்கைத்தமிழர்களின் கோரிக்கைகளை நியாயமான முறையில் அணுகி, அவற்றை சமாதானமாக நிறைவேற்றி வைத்திருந்தால்— இன்றைக்கு தமிழர் கூட்டணி இப்பிரச்சினையை உலகநாடுகளின்முன் எடுத்து வைத்திருக்கவேண்டிய அவசியம்— நிர்ப்பந்தம்— எதுவும் ஏற்பட்டிருக்காது!

காலம்கடந்து கூப்பாடு போடுவதில் பயனில்லையென்பதை ஆட்சியாளர்கள் உணர்ந்துகொள்ள வேண்டும்!

இலங்கைத்தமிழர்களுக்கு நியாயம் பெற்றுக்கொடுக்க இந்திய அரசு, இலங்கை அரசுடன் பேச்சுவார்த்தை நடத்தவேண்டும் என்று இந்தியப்பிரதமருக்கு தமிழக முதலமைச்சராக இருந்த கருணாநிதி கோரிக்கை விட்டதன்மூலம் இலங்கையின் உள்நாட்டுப்பிரச்சினையில் தலையிட்டு விட்டதாகவும் திரு.லக்ஸ்மன் ஜெயக்கொடி குற்றம் சுமத்தியிருக்கிறார்!

திரு.கருணாநிதி நடந்துகொண்ட விதம் அரசியல் பண்பாடு நிறைந்ததே தவிர — அதை இலங்கையின் உள்நாட்டு விஷயத்தில் நேரடியாகத்தலையிட்டதாக இஞ்சித்தும் கூறமுடியாது!

இலங்கைத்தமிழர் பிரச்சினைசம்பந்தமாக இலங்கைப் பிரதமருக்கு தமிழக முதல்வர் என்ற முறையில் திரு. கருணாநிதி நேரடியாகக் கடிதம் எழுதியிருந்தாரானால் அதை இலங்கையின் உள்நாட்டுப்பிரச்சினையில் தலையிட்டதாகக்கூறமுடியும்!

ஆனால் கருணாநிதி இலங்கைப்பிரதமருக்கு கடிதம் எழுதவில்லை!

தனது நாட்டின் பிரதமருக்குத்தான்— அதுவும் வெளிநாட்டுக்கொள்கைகளை உருவாக்கி அமுல்படுத்தும் அதிகாரமுள்ள இந்தியப்பிரதமருக்குத்தான்— தமது மாநிலமக்களின் கருத்தை— நாலரைக்கோடி தமிழர்களின் எண்ணத்தை— அறிவித்தாரே தவிர— வேறு யாருக்கும் அல்ல!

இதை வைத்துக்கொண்டு, கருணாநிதி இலங்கையின் உள்நாட்டுப்பிரச்சினையில் தலையிட்டதாக கூறுவது சுத்த விஷமத்தனமானது; கற்றுக்குட்டித்தனமானது.

கருணாநிதி இலங்கைத்தமிழர் பிரச்சினை சம்பந்தப்பட்ட தனது கருத்தை இந்தியப் பிரதமருக்கு எடுத்துக் கூறியது உள்நாட்டு விவகாரத்தில் தலையிடுவது ஆகும் என்றால்—

பாலஸ்தீனியரின் போராட்டத்துக்குஇலங்கை அரசு ஆதரவு தருவதாகக்கூறுவதை— இஸ்ரேலின் உள்நாட்டு விவகாரத்தில் தலையிடுவதாக அந்தநாட்டு அரசு குற்றம் சாட்டினால், அதற்கு இலங்கை அரசு என்னபதில் கூற முடியும்?

# பத்திரிகை தணிக்கையாளர் எப்படி செயற்படவேண்டும்?

ஜனநாயகத்தின் செவிலித்தாயாக இருப்பதற்குத்தான் தணிக்கை உத்தரவின் கீழ் தணிக்கையாளர் நியமிக்கப்பட்டிருக்கிறார். அதற்குக் கல்லறை தோண்டுபவராக இருப்பதற்கு அல்ல; பெரும்பான்மையினரின் கருத்துக்கள். அபிப்பிராயங்கள் ஆகியவற்றிலிருந்து வேறுபட்ட மாற்றுக் கருத்துக்களும் ஆட்சியிலுள்ள கட்சி மேற்கொள்ளும் நடவடிக்கைகள் பற்றிய ஆட்சேபனைகளும் விமர்சனங்களும் ஆக்கரீதியான சூழ்நிலைக்கு உதவும். இதில் நிர்ப்பந்தத்தாலான ஒன்றுபட்ட கருத்து என்னும் உயிரற்ற தன்மையை புகுத்துவது தணிக்கையாளரின் பணியல்ல.

மாற்றுக்கருத்து, ஆட்சேபம், விமர்சனம் ஆகியவை கடுமையான வார்த்தைகளில் தெரிவிக்கப்பட்டிருக்கின்றன என்பது மட்டும் அவை பிரசுரிக்கப்படுவதை தடைசெய்ய முகாந்திரமாக இருக்க முடியாது. ஏனெனில் கடுமையான வார்த்தைகள் பாதகத்தை உண்டாக்கிவிடா. சில வார்த்தைகளும் சொற்றொடர்களும் உணர்ச்சியெழுப்பும் வகையில் பேசும் மேடைப் பேச்சாளருக்கு நீண்டகாலமாக வகைச் சரக்காக இருந்து வருகின்றன. அவை அநேகமாக உண்மைப் பொருளை இழந்துவிட்டனஎன்றே கூறலாம்.

தணிக்கையாளர் ஆற்ற வேண்டிய பங்கு மிக நுட்பமானது; முக்கியமானது. அவர் வகிப்பது பெரும் பொறுப்பாகும். அவருடைய பணி, அவருக்குப் பொதுமக்களின் வெறுப்பை உண்டாக்கலாம் என்றாலும் அவர் அளவுக்குமீறி தனது பணியில் ஆர்வம் காட்டி அரசின் மெச்சுதலைப்பெற முற்பட்டுவிடக் கூடாது. அவர் மிக நுட்பமான சமநிலையைக் காத்து வரவேண்டும்.

ஒருபுறத்தில் அவர் நீண்டு நேராகச் செல்லும் சாலையிருக்க, அதில் பதுங்கிய ஆபத்துக்களும்வளைவு நெளிகளும் இருப்பதாக கற்பனை செய்துகொண்டு எல்லா சுதந்திரக் கருத்துக்களையும் அமுக்க [illegible]முற்படக்கூடாது. மறுபுறத்தில் அவர் வன்முறையை வளர்க்கிற அமைதியின்மையை தோற்றுவிக்கிற எல்லா முயற்சிகளையும் கண்டுபிடிக்க எப்போதும் உஷாராக இருந்துவரவேண்டும்!

இந்தியாவின் பத்திரிகை தணிக்கைபற்றி பம்பாய் உயர் நீதிமன்ற நீதிபதிகள் திரு. டி.பி. மதோன், எம். எச். கானியா ஆகியோர் அளித்த தீர்ப்பு.

# மட்டக்களப்பில் தமிழாராய்ச்சி மாநாடு ஏற்பாடுகள் யாவும் பூர்த்தி

அனைத்துலக தமிழாராய்ச்சி மன்றத்தின் இலங்கைக் கிளையினர் நடத்தும் தமிழாராய்ச்சி மாநாடு மார்ச்சு 18, 19, 20, 21,ம் திகதிகளில் மட்டக்களப்பில் கோலாகலமாக நடைபெற ஏற்பாடுகள் யாவும் பூர்த்தியாக்கப்பட்டுள்ளன.

18-3-76 வியாழன் காலை 9 மணிக்கு மாநாட்டில்பங்கு பற்றுவோர் பதிவு செய்யும் நிகழ்ச்சியும் மாலை 5மணிக்கு மாநாட்டுப் பேராளர்களுக்கு வாழைச்சேனை மாவித்தியாலயத்தில் வைத்து வாழைச்சேனை மக்கள் அளிக்கும் வரவேற்பு நிகழ்ச்சியும் இடம் பெறும்.

19-3-76 வெள்ளிக்கிழமை, பேராளர்களுக்கு மட்டக்களப்பு மாநகரசபை வரவேற்பளிக்கும் அதைத் தொடர்ந்து காலை 10 மணிக்கு மாநாடு தொடக்க விழா நடைபெறும். இதைத் தொடர்ந்து புத்தகக் கண்காட்சி திறந்து வைக்கப்படும்.

அன்று பிற்பகல் 2.30முதல் 4 30 வரை பொதுக்கருத்தரங்கு கல்லடி உப்போடையிலுள்ள சுவாமி விபுலானந்த மணி மண்டபத்தில் நடைபெறும், தொடர்ந்து சுவாமி விபுலானந்தர் கட்டுரைத் தொகுதி வெளியிடப்படும்.

20: 21,ம் திகதிகளில் மட்டக்களப்பு அரசினர் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் காலையில் பொதுக் கருத்தரங்கும் மாலையில் குழுக் கருத்தரங்கும் நிகழும்.

தினமும் கலைநிகழ்ச்சிகளும் இரவில் நடைபெறவுள்ளன.

## அமரர் திடவீரசிங்கம்

காங்கேசன்துறைத்தொகுதியில் நடந்த தேசியப்பேரவைத் தேர்தல்களின் போதெல்லாம் தந்தைசெல்வாவின் வெற்றிக்காக இரவு பகலென்றும் பாராமல் சொந்தச் சுகதுக்கங்களில் ஈடுபட்டு வாளாவிருக்காமல் தந்தையோடு; தோளோடு தோள்நின்று உழைத்து வெற்றிகளை நிலைநாட்டிய கர்மவீரன் — கன்னித்தமிழ்க்காதலன் —மான உணர்வு படைத்த ஞானத் தமிழ் மறவன் திடவீரசிங்கம் அண்மையில் இறைபதம் அடைந்தமை இன்னலுறும் தமிழினத்திற்கு இடிவிழுந்த செய்தியாகும்.

தமிழரல்லாத காரியதரிசி ஒருவரை அரசியலார் காங்கேசன் துறைப்பட்டின சபைக்கு அனுப்பியபோது அதனை ஆக்ரோஷத்துடன் எதிர்த்து அக்காரியதரிசியை எதிர்த்தோட வைத்து அதன் மூலம் தமிழ் ஈழத்தின் உள்ளூர் ஆட்சி மன்றங்களில் எல்லாம் தமிழ்க்காரியதரிசிகளை நியமிக்க வைத்த வீரர் திடவீரசிங்கமே! நீ மீண்டும் ஈழ மண்ணில் இன் தமிழ் மறவனாகப் பிறக்க வேண்டும் என்று நின் சிரார்த்த தினத்தில் இறைவனை வேண்டுகின்றோம்.

— சாமி மைந்தன்

## மூன்று சொற்பொழிவுகள்!

இலங்கை அறிவு இயக்கம் மார்ச் 26ஆம் திகதி இரவு 6-30 மணிக்கு முகத்துவாரம் அருணாசலேஸ்வரர் ஆலயத்திலும், 28ம் திகதி மாலை 4-30 மணிக்கு கொட்டாஞ்சேனை விவேகாந்த சபை மண்டபத்திலும்; கொழும்பு விவேகானந்த சபையினர் 27ந் திகதி பிற்பகல் விவேகானந்த சபை மண்டபத்திலும் எடுக்கும் வள்ளுவர் விழாவில் பண்டிதர், சைவப் புலவர் சிவத்தமிழ்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் திருக்குறள் சம்பந்தமாக சிறப்புரை நிகழ்த்துவார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாங்குயில் கூவிடும் பூஞ்சோலை!

மாங்குயில் கூவிடும் பூஞ்சோலை!

புரட்சிக்கவிஞரின் புதுமை விளக்கம்; அதோ அந்தப் பூஞ்சோலையில் மாங்குயில்!

முட்புதர்கள்,—வரண்ட தடாகம்—கோடையின் கொடுமை இதிலே வாடிடுபவன் அதைப் பூஞ்சோலையாகத்தான் கருதுகிறான்!

கீதம் எழுப்பிய அந்தக் குயில்கள் வெளியேயிருப்பதும் ஒன்றுதான்; பூஞ்சோலை நடுவே வாழ்வதும் ஒன்றுதான் என நினைத்திடுவதில் நிலைமைபுரிகிறது அதன் தாகம் தெரிகிறது.

ஊரின் நடுவே குயில் கீதம் பாடும்போது அதனை ரசிக்கத்தெரியாத ஞான சூனியங்கள் கல்கொண்டு தாக்கின.

சூ.........சூ......... என விரட்டின. அதோ அந்தக் குயில் பூஞ்சோலைக்குள் புகுந்து விட்டது.

குயிலின் கீதம் ஓய்ந்து விட்டது ஊரில்!

அமைதி......!

இதோ அதற்குப் பூஞ்சோலை கிட்டிவிட்டது; அதன் கீதம் கேட்கிறது.

அந்தக் கீதம் சோலையின் சுவர்களாம் மரங்களில் மோதி அதன் காதுக்கு மட்டுமே கேட்கிறது.

சோலைவாழ்வு முடிந்து நாளை அந்தக் குயில் வெளியே பறந்துவரத்தான் போகிறது!

அன்றையத்தினம் அது எழுப்பிடவிருக்கும் கீதத்தையாவது இந்த மக்கள் ரசித்திடும் பக்குவத்தைக் காலம் தந்திடட்டும்! இனிய கீதம் எங்கெங்கும் ஒலிக்கட்டும்!

புரட்சிக்கவிஞர் மாங்குயில் கூவிடும் பூஞ்சோலை என்று வருணித்ததன் பொருள் இதுதானோ?

—கலைஞர் கருணாநிதி

# ஒரு விளக்கம்!

அன்புடையீர்!

21-2-76 சுதந்திரன் இதழில், பக்கம் ஆறில் வெளியான "கல்லூரிகளில் பண்பாட்டுப் புரட்சியும், இரவு விருந்துகளில் இன்பத் தமிழ் முழக்கமும்" என்னும் தலைப்பின் கீழ் வெளியான செய்தி பற்றிய ஒரு சிறு விளக்கத்தை நான் தரவேண்டியவனாயிருக்கின்றேன்.

7-2-76 அன்று நடைபெற்ற எமது மன்ற இரவு விருந்து நிகழ்ச்சியில் செல்வன் ஆர். இரவிக்குமாரன் தானாகவே ஆங்கிலத்தில் பேசவில்லை; சங்கத்தின் வேண்டுகோளை அடுத்தே அவர் ஆங்கிலத்தில் பேசினார். மேலும் வேம்படி மகளிர் கல்லூரியிலும் எமது கல்லூரிடைப்போன்ற இரண்டு வாழ்த்துக்கள் தமிழிலும், ஒரு வாழ்த்து ஆங்கிலத்திலும் இடம் பெற்றன. மேலும் சுண்டிக்குளி மகளிர் கல்லூரியில் முழு வாழ்த்து நிகழ்ச்சிகளும் ஆங்கிலத்தில் இடம் பெற்றமை கவனத்திற்குரியது.

நாம் ஆங்கிலத்தில் ஒரு வாழ்த்தினை அளித்தது ஆங்கில மோகத்தினால் அல்ல 'பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழ் மொழியிற் பெயர்த்தல்வேண்டும்" என்ற புதுமைக் கவி பாரதியின் கனவை நனவாக்கவும், ஆங்கிலத்திலுள்ள விஞ்ஞானக்கலை,இலக்கியச்செல்வங்களை நாம் கற்று, அதன் மூலம் நாம் மட்டுமின்றி சமூகமும் பயனடையச்செய்யவும். மேலும் தமிழ் மொழியின் தொன்மையையும் சிறப்பையும் அறிவதற்கு ஆங்கிலத்தை ஒரு சாதனமாகவும் ஒப்பிடுவதற்கு ஆங்கிலத்தை ஒரு மொழியாகவும் உபயோகிப்பதற்கும். இன்று உலகப்பொதுமொழியாகவும், மேலும் எமது பாடாவிதானத்தில் ஆங்கிலம் ஒருகட்டாயபாடமாக்கபட்டிருப்பதாலும் எம்மால் ஆங்கிலத்தை முற்றாக ஒதுக்க முடியாத நிலை ஏற்பட்டிருக்கின்றது. ஆங்கிலத்தின் முக்கியத்துவத்தை நீங்களும் உணர்வீர்கள் என நம்புகின்றேன்.

## மக்கள் குரல்

எனவேதான் நாம் மாணவர்களுக்கு ஆங்கிலத்தில் பயிற்சியளிக்கு முகமாக ஆங்கிலத்திலும் ஒரு வாழ்த்தினை அளித்தோம். ஆயினும் பிரதம அதிதியின் மன்றவாழ்த்தினையும் செயலாளரின் சககல்லூரிக்கான வாழ்த்தையும் தமிழ்மொழியில் அளித்ததன் மூலம் நாம் தமிழை புறக்கணிக்கவில்லை என்பதை கட்டிக்காட்ட வேண்டியவனாயிருக்கின்றேன். மேலும் யாழ்-மத்திய கல்லூரி, பீற்றர் பேர்சிவல், ஆறுமுகநாவலர் போன்ற சிறந்த பல தமிழறிஞர்களை உருவாக்கியமை குறிப்பிடத்தக்கது.

தங்கள் உண்மையுள்ள

வி. ருத்திரகுமாரன்

(யாழ்-மத்திய கல்லூரி மாணவர் சங்கத் தலைவர்)

# செல்வா பிறந்தநாள் கட்டுரைப் போட்டி

தமிழர் கூட்டணித் தலைவர்—மூதறிஞர் தந்தை செல்வா அவர்களின் 79வது பிறந்த நாள் எதிர்வரும் 31-3-76 ஆகும். அதையொட்டி தமிழ் இளைஞர்பேரவையின் வவுனியா மாவட்டக் கிளையினர் ஓர் கட்டுரைப்போட்டியை நடாத்தவுள்ளனர். தெரிவுசெய்யப்படும் முதல் மூன்று கட்டுரைகளுக்கும் பெரியவர் பிறந்த நாள் விழாவில் பரிசுகள் வழங்கப்படும்.

கட்டுரைக்கான தலைப்புக்கள்— (1) செல்வா பிறந்திலரேல்...! (2) தந்தை செல்வா—ஒரு சகாப்தம் (3) தர்தை செல்வா காணும் கனவு (4) ஈழத்தின் 30 ஆண்டு அரசியலில் செல்வா ஏற்படுத்திய தாக்கம்.

கட்டுரைகள் அனுப்பவேண்டிய இறுதித் திகதி 15-3-76. அனுப்ப வேண்டிய முகவரி:- த. ம பீற்றர் பொன்கலன்ட் அமைப்பாளர், தமிழ் இளைஞர் பேரவை, நெடுங்கேணி.

# "தமதுமொழியை பேணுவதில் தமிழர்....

—1-ம் பக்கத் தொடர்

"பிரிவினை கோஷத்தோடு பிறந்ததுதான் தி முகழகம், கட்சியின் 'சூடான' தலைவர்களும் மக்களில் சிலரும் வன்முறையில் இறங்கினால் இந்திரா காந்தி அரசு கடுமையான எதிர்ப்பை சந்திக்க வேண்டிவரும் அந்த எதிர்ப்பு நீண்ட நாளைய பிராந்தியப் பிறப்பை உறுதிப்படுத்தும். இத்தகைய எதிர்ப்பு உருப்பெறவில்லையென்றால் தான் இந்திராகாந்தி அரசு நிலைக்கும். ஆனால் திமுக ஆட்சி வீழ்ச்சிக்குப்பிறகு குஜராத் அரசின் வீழ்ச்சி கட்டாயம் நிகழும்.

"இருப்பினும் மத்திய அரசுக்கு இப்போது ஆபத்து இருப்பதாகச் சொல்ல முடியாது.

"கடுமையான எழுச்சிகளால் சிரமங்கள் ஏற்பட்டால் தமிழ்நாட்டுக் காவல் துறையால் அடக்க முடியாமல் போகலாம். அல்லது அவர்கள் அடக்க மறுக்கலாம். அந்நிலையில் இந்தோ வேகம் காவலர்களை துப்பாக்கியுடன் கொண்டுவந்து தமிழ் மக்களை அடக்க நேரிடும். இவையும் எதிர்பார்க்கப்படுவதாக அந்நிய நோக்கர்கள் கருதுகிறார்கள்.

"மத்திய ஆட்சியை எதிர்க்கத் தமிழ் மக்களைத் தயார் படுத்தகருணாநிதியும் மேல்மட்ட உதவியாளர்களும் தமிழ் நாடு முழுவதும் கூட்டத்திற்கு ஏற்பாடு செய்திருந்தனர், தலைமறைவு இயக்கம் ஒன்றை அமைக்கவும் திட்டமிட்டிருந்தனர். இவைதான் மத்திய ஆட்சி ஏற்படக் கைசிக் காரணங்கள்.

"மாநில ஆட்சிகளை நீக்குவது சட்டபூர்வமானதுதான். முன்பும் செய்யப் பட்டுள்ளது.

"இதே வேளையில் — இந்தியா ஒரே கட்சி ஆட்சியை நோக்கிப் போய்க்கொண்டிருப்பதாகவும், இருந்தும் தமிழ்நாட்டை இந்தியக் கூட்டாட்சியிலிருந்து பிரிக்க முடியவில்லையென்[illegible] கோய்ந்த குாலில் [illegible] நிதி நிருபர்களிடம் கூறினார், 'தம் ஆட்களை அமைதியாக இருக்கும்படி அவர் கேட்டுக் கொண்டார். ஏனெனில் மத்திய ஆட்சியின் இரும்புக் கரங்களுக்கு அவர்களைக் காட்டிக்கொடுக்க விரும்பவில்லையென்றார்.

"மத்திய அரசைப் பற்றி இதுவரை சரியாக மதிப்பிட்ட கருணாநிதி இனி...?"

இவ்வாறு கேள்விக் குறியுடன் அக்கட்டுரைமுடிவடைகிறது.

## தமிழ்இளைஞர்பேரவை கரம் பொன் கிளை

கரம்பொனின் தமிழ் இளைஞர் பேரவைக் கிளை காவலூர் பா. உ. கா. பொ. இரத்தினம் தலைமையில் நிறுவப்பட்டது.

தலைவர்: ந. வரதராசா துணைத்தலைவர்: தி. கயிலாயநாதன் செயலாளர்: தி. சிறீதரன், துணைச்செயலாளர்: க. மோகனராசா, பொருளாளர்: [illegible] பேர் கொண்ட செயற்குழுவும் தெரிவுசெய்யப்பட்டது.

# ஜெயப்பிரகாசர் எழுதிய கவிதை!

வாழ்வில் தோல்வி மலிந்துளது;
வெற்றி வந்தெனை நெருங்கிடினும்
வீழ அதனை விரட்டிடுவேன்!
வாழி! அதுவென் பிழையல்ல!
வெற்றி, தோல்வி என்பதற்கே
வேறு பொருள்தான் என்னிடத்தே:
முற்றும் பிறிதொரு வழியதுஎன்
முயற்சி புரட்சிக் குரியதுவே!
தொண்டு ஆக்கப்பணி, தியாகம்
தீர மிக்க போர் மற்றும்
கண்ணும் முழுமைப் புரட்சியிவை
கனாமுனனுள்ள லட்சியங்கள்!
உலகோர் தோல்வி என்பதுவோ
உயர்த்தும் படிக்கல் தொண்டருக்கு!
பலப்பல படிகள், தொலைவினிலே
படுகிற குறியினை எய்திடவே!
நிற்கச் செய்திடும் நிலை யெதுவும்
நேரா தெனக்கு நடுவினிலே;
அற்ப ஆசைகள் எனக்கில்லை;
அனைத்தும் அவனடி சமர்ப்பணமே!
தோல்விகள் எனக்கு; எனினுமவை
தீர லட்சிய இளைஞரது
கால்படு மலராய், முள்பாதைக்
கடுமை தணித்தால் மிகமகிழ்வேன்!

(பம்பாய் ஜஸ்லோக் மருத்துவமனையிலிருந்து கடந்த டிசம்பர் மாதம் 3ம் தேதியன்று சர்வோதயக் தலைவர் ஜெயப்பிரகாஷ் நாராயணன் எழுதிய உணர்ச்சி ததும்பும் இந்திக் கவிதையின் தமிழாக்கம் இது. அக் கவிதையை 17ம் தேதியன்று வினோபாவிடம் எஸ். எம். ஜோஷி சேர்ப்பித்தார்.)

—நன்றி: "தியாகபூமி".

மாணவமணிகளே!

நவீன முறையில் பனைவெல்லம்

செய்முறைப் பாடத்திட்டத்திற்கேற்ற மேற்படி புத்தகம் பெறவிரும்புவோர் 15 மில்க்வைற் சோப் அல்லது 2 பார் சோப் அல்லது 2 நீம் வாசனை சோப் அல்லது 2 மில்க்வைற் சலவைப் பவுடர் மேலுறைகளை அனுப்பிப் பெற்றுக்கொள்ளவும்.

மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகம்,

த பெ. இல. 77, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# அஹிம்சை என்பது வீரத்தின் நிறைவே தவிர கோழைத்தனமல்ல!

## —அண்ணல் காந்தி அளித்த விளக்கம்!

இந்திய வானில், சுதந்திரச் சூரியன் உதித்து, அடிமையிருள் அகன்றிருந்த வேளை நாடும் மக்களும் மகிழ்ச்சி வெள்ளத்தில் மிதந்திருந்த நேரம் துயரக்கடலில் மூழ்கியிருந்தார் அண்ணல் காந்தியடிகள்!

இந்து-முஸ்லீம் கலவரம் காரணமாக, ரணகளமாய்க் கிடந்த நவகாளியில் பாதயாத்திரை மேற்கொண்டிருந்தார். மகாத்மாவைக் கண்ட மக்கள், தங்களுக்கு விளைந்த வேதனைகளைச் சொல்லியழுது புலம்பினர்.

சென்ற இடமெல்லாம் சோகத்தின் சாயல்! வன்முறையின் கொடுமையால் சிந்திய செந்நீர் ஒரு புறம்; வறுமையின் பிடியில் சிக்கிய ஏழையரின் கண்ணீர் மறுபுறம். ஓ! பாரதமே! நீ சுதந்திரத்தை அனுபவிக்கின்ற லட்சணம் இதுதானா?

சந்திரன் உலாவரும் அந்திப் பொழுது—வழிபாட்டுக் கூட்டத்தில் அண்ணல் அறிவுரை வழங்கிடும் நல்வேளை. அருகினில் அழுகுரல்! அவலக் குரல்!

பத்துப் பதினைந்து நங்கையர்—சீர்குலைந்தசிகை, நிலைகுலைந்த ஆடை சோகந்தோய்ந்த முகம், அழுது அழுது சிவந்துபோன விழிகளில் துயர நதி— ஓ! அவர்களனைவரும் மணமாகாத இளங்கன்னியர்! தவறு—மணமிழந்த இளம் மலர்கள்!

அம்மங்கையருள் ஒருத்திதான் 'அவள்'. பாரதத் தாயின் புதல்வியருள் அவளும் ஒருத்தி. அண்ணலிடம் "நியாயம்" கேட்க வந்திருக்கிறாள்.

'பாபுஜி, எங்களுக்கு நேர்ந்த கதியைப் பார்த்தீர்களா?"— இது அவள் குரல்தான்.

"குழந்தாய், என்ன நேர்ந்தது? ஏன் அழுகின்றாய்? விபரமாகச் சொல்லம்மா" என்றார் அண்ணல். 'அவள்' தொடருகின்றாள், அகிம்சை. அகிம்சை என்று சொல்லி எங்கள் கரங்களைக் கட்டிப் போட்டுவிட்டீர்களே, பாபுஜீ! வெறிபிடித்த காமுகர்களால் எங்கள் பெண்மை சூறையாடப்பட்டு விட்டதே! உங்களுடைய அகிம்சை நெறியைப் பின்பற்றிய எங்களுக்குக் கிடைத்த பரிசைப் பார்த்தீர்களா? ஐயோ கறைப்பட்ட நாங்கள் இனி என்ன செய்வோம்? எப்படி வாழ்வோம்! வழி சொல்லுங்கள், பாபுஜி!

கோட்சே சுட்டபோது கூட இவ்வளவு வலி, அண்ணலின் நெஞ்சினில் இருந்திருக்க முடியாது. 'அவள்' மொழிகளைக் கேட்டுத் துடிதுடித்துப்போனார். வேதனையுடன் ஆவேசமும் கொப்பளிக்க அண்ணல் சொல்கிறார்.

"எனதன்பு மகளே, பெருந்தவறு செய்துவிட்டாய் நீ. ஆம் நீயேதான்! அகிம்சை நெறியைத் தவறுகவல்லவா புரிந்து கொண்டாய்! அகிம்சை என்பது கோழைத்தனத்தின் மறுபெயரல்ல, வீரத்தின் நிறைவேயாகும். உண்மையிலேயே எனது கொள்கையிலே தெளிவு பெற்றவளாக இருந்திருந்தால் — இயற்கை உனக்கு வழங்கியிருக்கின்றதே, பற்களும் நகங்களும், அவற்றைக் கொண்டேனும், உன் பெண்மையினைச் சூறையாட வந்த கயவனைத் தாக்கியிருக்கலாம். நீ தாக்கும்போது, அவன் இறந்துபோயினும் பாவமில்லை. உன்னை நீ காப்பாற்றிக்கொண்டிருக்கலாம். போற்றுதற்கரிய கற்பினுக்குக் களங்கம் விளைந்திருக்காது. ஓ! எனக்கே வெட்கமாயிருக்கின்றது. பலாத்காரம் கோழைத்தனம் ஆகிய இரண்டில் எது வேண்டும் என்று என்னைக்கேட்டால், கோழைத்தனத்தை ஒதுக்கிவிட்டு, பலாத்காரத்தையே தேர்ந்தெடுப்பேன. அன்பு கெழுமிய பொது மக்களே, ஒன்றை நினைவில் வையுங்கள்: அகிம்சை என்பது வீரத்தின் நிறைவே யொழிய, வெறும் கோழைத்தனமல்ல."

கூட்டம் கலைகின்றது. நீலவானில் நிலவைக் கவ்வியிருந்த கருமேகங்கள், விலகி, ஒளி தோன்றுகிறது. அண்ணல் செல்கிறார். அவர் பின்னே, 'அவள்' நடக்கின்றாள். ஆம், இப்போது அவளுக்கு 'அண்ணலின் அகிம்சை நெறி' விளங்கிவிட்டது!

# சாதியொழிப்புக்கு நல்வழி கலப்புத் திருமணம் ஒன்றே!

## இளைஞர்கள் இதற்கு முன்வரவேண்டும்!

தமிழ்சமுதாயத்திலுள்ள அழிக்கப்படவேண்டிய குணம், சாதி ஆகும். சாதியை அடிப்படையாகக் கொண்ட குடும்பங்கள் தங்களைச் சுற்றி மண உறவுக் கட்டுப்பாடுகள் என்னும் அகழிகளை வெட்டிக்கொண்டு மனித இன உறவுகளின் எல்லையைச் சுருக்கி, குறுகிய மனப்போக்கை வளர்த்து வருகின்றன. இதனாலேற்படும் பூசல்கள், போராட்டங்கள், பொருமை எண்ணங்கள், வன்முறைகள் ஏராளம். இதனை மாற்ற கலப்பு மணத்தை சட்டமாக்குவதே வழி. சாதி குறைந்த பெண்களைத் திருமணம் செய்ய சமுதாய நல்வாழ்வில் அக்கறைகொண்ட தமிழ் இளைஞர்கள் முன்வந்து ஒரு இயக்கமாகத் தொழிற்படல் அவசியமாகும்.

திருமணத்தை ஆயிரங் காலத்துப் பயிர் என வர்ணிக்கின்றோம். ஆனால் தாலி கட்டும் உரிமையினைத் தவிர, பெண்ணை நிர்ணயிப்பது, பேசி முடிப்பது எல்லாமே சாதிக்கூட்டம்தான். இதில் காதலுக்கோ, ஆயிரங் காலத்து வாழ்விற்கு அடிப்படை போடவேண்டிய இருவரின் கருத்துக்களுக்கோ இடம் இருப்பதில்லை. சாதீயமணம், கட்டுப்பாடுகள் காரணமாக காதலை அனுமதிப்பதில்லை. கலப்புமணத்தால், பக்குவப்பட்ட கருத்தொருமைப்பாடும், பண்பட்ட காதல் உணர்வும் உண்டாகும் வாய்ப்புண்டு என்பதினால் கலப்பு மணம் அவசியம்.

தீண்டாமையினை ஒழிக்க ஏட்டளவில் சட்டங்கள் ஆயிரமிருக்கலாம். ஆனால் நடைமுறையில் தீண்டாமை ஒழியவேண்டுமானால் கலப்பு மணத்தால்தான் ஒழிக்க முடியும். தீண்டாமை நிலவும் இரு வேறு வகுப்புக்கிடையில் மண உறவு ஏற்படுமானால் அங்கே தீண்டாமை என்ற வார்த்தைக்கே இடம் இல்லாமல் போய்விடும். தீண்டுவதையே பாவம் என்று கருதுவோர் கொள்வினை, கொடுப்பினை எப்படி வைத்துக்கொள்வார்கள் என்று சிலர் கேட்கின்றார்கள்.

எனவே சாதிக்கொடுமைகள் அனைத்தும் ஆணிவேர் சல்லிவேரின்றி அகற்றப்பட வழிவகுக்கும் கலப்பு மணமுறை நன்மையானதே. இன்று மணமுறைகள் ஆக்கபூர்வமான காதலுக்கோ, பண்பட்ட இரு உள்ளங்களின் பரிமாற்றத்திற்கோ இடம் கொடுப்பதில்லை. வரதட்சனை நோக்கும், பெற்றோர் கடமையைத் தீர்க்க வேண்டுமென்று கடன்கழிக்கும் நடைமுறையினையும், இலாபத்தை எதிர்பார்த்து மண உறவைச் சாதகப்படுத்தும் சடங்குகளின் இணைப்பாகவே காணப்படுகின்றன. கலப்பு மணத்தால் இதனையும் நீக்கமுடியும்.

வரையறுக்கப்பட்ட கூட்டுப் பாடுகளை மீற முடியாமலும் வரதட்சனை கொடுத்துத் தம்மை ஒருவனுக்கு மனைவியாக்கிக்கொள்ள இயலாமலும் ஒருசில சாதிகளில் பருவம் அடைந்த பெண்கள் இளமையில் முதுமைபெற்று மனவிரக்தியடைந்து சொல்லொணாத் துயரத்தையும், பருவ ஆசைகளையும் மனதில் அடக்கிவாழும் அவல நிலை தீர கலப்புமணம் அவசியம்.

பழைய முறைகளிலிருந்து விடுபட வழியறியாத பெற்றோர் சமூகப் புறக் கணிப்புகட்கு அஞ்சாமல் சாதியினை ஒழித்துக்கட்ட முன்வர வேண்டும்.

மண முறையின் பரிணாம வளர்ச்சிப்பாதையில் கலப்பு மணம் தவிர்க்கப்பட முடியாத ஒன்றாகும். மணவாழ்வில் அமைதி, நல்லுறவு என்பவை தம்பதிகளின் மன நலனையும் பக்குவத்தையும் பொறுத்தவையல்லாமல் கலப்பு மண முறையில் குற்றம் காண எண்ணினால் அது பொருத்தமற்றதாகும்.

### சிவசக்தி

—8-ம் பக்கம் பார்க்க



அண்மையில் மட்டக்களப்பில் நடைபெற்ற சாதியொழிப்பு சமூக சீர்திருத்த திருமணத்தில் தமிழர் கூட்டணித் தலைவர்கள் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினர். மட்டக்களப்பைச் சேர்ந்த திரு.வ.பாலசிங்கம் அவர்களின் மகள் எலிசபெத்துக்கும் யாழ்ப்பாணம் திரு. என்.ரி. செல்லத்துரை அவர்களின் மகன் இரத்தினசிங்கத்துக்கும் நடைபெற்ற இக்கலப்புத் திருமணத்தின் போது மணமக்களுடன் தமிழர் கூட்டணிச் செயலாளர் நாயகம் நாவலர் அமிர்தலிங்கம், தமிழ் மகளிர் பேரவை செயலாளர் திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் சிந்தனைச்சிற்பி சி. கதிரவேற்பிள்ளை, மட்டுநகர் முதல்வர் செ. இராசதுரை, உடுவில் பா.உ. திரு.வி.தருமலிங்கம், மூதூர் பா. உ. திரு. அ. தங்கத்துரை, கல்முனை திரு.பி.வி கந்தையா, திரு.தம்பு கந்தையா ஆகியோர் மேற்படி படத்தில் காணப்படுகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இத்தாலிய விடுதலை வீரர்கள்

# மாஜினி, கரிபோல்டி!

"எந்த இனத்திற்கு உரிமைக்காகப்போராடும் உணர்வும் சக்தியுமில்லையோ அந்த இனத்திற்கு உரிமை வாழ்வு வாழ்கின்ற தகுதியுமில்லை" என்ற சித்தாந்தத்தை தன் எழுத்தின் மூலம் இத்தாலி முழுவதும் படரவிட்டான் பேனு மன்னன் மாஜினி.

"என் அன்னையாகிய பூமியின் வீரச்செல்வங்களே! இத்தாலி நாட்டை அந்நியர் ஆதிக்கத்தினின்றும் விடுவிக்கத் திரண்டெழுங்கள். நீங்கள் என்னுடன் வநதால் பசி, தாகம், இரத்தம், வியர்வை, போர் என்பன என்னுல் தரக்கூடியவை. உங்களுக்குப் பணமோ, பதவியோ தருவதற்கு என்னிடம் எதுவும் இல்லை. மானம் காக்கும் மறவர் கூட்டம் வீர உணர்வுபெற்ற வீரர் கூட்டம் என்னேடு சேரீர். என் திருநாட்டை காத்திட வாரீர்" என்று சங்க நாதம் செய்தான் கட்டிளங்காளை கரிபால்டி.

இக்காளையர் இருவரும் சிதறுண்டு கிடந்த இத்தாலியை மீண்டும் இணைத்திடவேண்டுமென்று விடாப்பிடியாக முயன்றுர்கள். மாஜினி எழுத்தாளன்; பேனு மன்னன். எழுத்தின் மூலம் பத்தொன்பதாம் நூற்றுண்டில் சிதறுண்ட இத்தாலியை இணைக்க எழுச்சியூட்டியவன். மாஜினியின் எழுத்துக்கு செயல் வடிவம் கொடுத்தவன் கரிபால்டி. இத்தாலியின் விடுதலைக்கு வித்திட்ட இரு இளைஞர்களும் உலகத்தில் விடுதலைக்கு போராடுவோருக்கெல்லாம் கலங்கரை விளக்காகக் காட்சி தருகிறுர்கள்.

அவர்கள் இருவரும் வாழ்ந்த காலத்தில் ஆஸ்திரியாவின் ஆதிக்கம் ஒரு பக்கம்; பீட்மண்டு என்ற இத்தாலிய அரச மரபினரின் ஆட்சிமறு பக்கம்; போப்பாண்டவரின் ஆணையின் கீழ்க் கட்டுண்டு கிடந்த பகுதிகள் மற்ெருரு பக்கம்; நேப்பிள்சு மன்னரின் அடக்குமுறையில் அவதியுற்ற மக்கள் இன்ெனுரு பக்கம்; இவ்வாறு நான்கு திக்குகளாகக் கிடந்த இத்தாலியைஇணைத்திடவேண்டுமென்று இரண்டு விடுதலை வீரர்களும் இளமையிலேயே எண்ணினர்.

பேனு மன்னன் மாஜினிக்கு வயது பத்து. அந்த வயதிலேயே அரசியல் பக்குவம் பெற்றுவிட்டான். ஆட்சியாளர் அவனை அடக்குமுறைப் பார்வைக்குஇலக்காக்கினர். வழக்கறிஞர் பட்டம்பெற்ற அவன் வழக்கறிஞர்தொழிலை விட்டு மக்களின் இணைப்புக்காக வழக்காடி வாந்தான். வீரன் மாஜினிக்கு சாவோனு கிறைச்சாலை பூஞ்சோலை ஆயிற்று. பொறுத்தது போதும்பொங்கி எழுக என அவன் அறை கூவியபோது எழுச்சியுற்றனர் மக்கள். அவர்களை வழி நடத்த தலைவர் எவரும் முன் வரவில்லை. எமக்கொரு தலைவர் வருவாரா என்று ஏங்கிக்கிடந்தனர் இத்தாலிய இளைஞர்கள்.

அவர்கள் இதயதாகம் வலிமைபெற்றது. நாடு கடத்தப்பட்ட கரிபால்டி வருவானுவருவானுஎன்ற மந்திரம் பலித்தது. கரிபால்டி அவர்கள்முன்தோன்றினுன். 1848ம் ஆண்டு சித்திரைத் திங்கள் தாயகம் வந்த கரிபால்டி 'உலக இன்பங்களை எம்முன் கொட்டினுலும் உலகத்துச்செல்வங்களை என்முன் நீட்டினுலும், என்னுடைய வீரர் அணிக்கு இணையாகுமோ என்று வீறு கொண்டான்.

கரிபால்டி வந்து விட்டதை அறிந்த மக்கள் ஆஸ்திரிய ஆதிக்கத்தை எதிர்த்திட அணிதிரண்டனர். சுதந்திரத் தீ விண்ணை மூட்டியது. ஏர்பிடித்தோரும் போர்ப் பறை கேட்டு போராளிகளாயினர். தொழிலாளரும், இளைஞரும் தள்ளாத கிழவரும் படைகளில் சேர்ந்தனர். ஒரு வாரத்திற்குள்ளே

## புத்தொளி

ஆஸ்திரிய பட்டாளம் பொடிப்பொடியாலது.

இலண்டனிலிருந்தமாஜினி மனம் மிக நெகிழ்ந்து மகிழ்ந்து இத்தாலி வந்தான். முடியாட்சியின் முடிவுக்கு இதுதான் தருணம். மக்களாட்சிக்கு, மக்களே விழித்திடுக என்றுன். மாஜினியால் பிரகடனப்படுத்தப்பட்ட குடியரசு எட்டு வாரங்களே வாழ்ந்தது. சிதறுண்டோடிய ஆஸ்திரியப் படைகள் மீண்டும் சேர்ந்து வந்து தாக்கின. சரணடைய வேண்டியேற்பட்ட மாஜினி மீண்டும் இங்கிலாந்துசெல

## விடுதலை விரும்பிகளுக்கெல்லாம்

## இவர்களது வாழ்க்கை ஒளிவிளக்கு!

ஆஸ்திரியாவுக்குப் பயந்த அரசு அவனை அங்கிருந்து விரட்டியது. காடுமலை என்று அலைந்தான். சார்டினியா துனீசியா, சிப்ரோலடர் என நடையாக நடந்தான். 1851ல் நியூயார்க் நகர் வந்த கரிபால்டி மெழுகுவர்த்தித்தொழிலைச் செய்தான். 1854ல் பிறந்தகம் வந்த கரிபால்டி விவசாயத்தில் கவனம் செலுத்திஞன். விவசாயத்தில் ஈடுபட்டாலும் விடுதலை வேட்கை நீறு பூத்த நெருப்பாக இருந்து வந்தது.

இத்தாலியின் ஒரு பகுதியை ஆண்ட மன்னனின் அமைச்சன் கவூர், மாஜினியையும், கரிபால்டியையும் பயன்படுத்த எண்ணினுன். அந்நியர் ஆதிக்கம் ஒழிந்தால் போதும் என்ற எண்ணம்கொண்ட கரிபோல்டி அதற்கு இசைந்தான். ஆஸ்திரியாவை எதிர்ப்பதற்குப் பிரான்சும் சம்மதித்தது.

பிரான்சிய வீரன் நெப்போலியன் ஆஸ்திரியமிடம் சரணடைந்தான். பல இன்னல்களுக்கிடையே கரிபால்டி பலம் சேர்த்துக் கொண்டான். நேப்பில்சிலும், சிசிலியிலும் வெற்றி பல கண்டான் கரிபால்டியின் வெற்றியை ஆங்கிலக் கவி டெனிசனும் புகழ்ந்து பாடினுன்.

தன் கண்முன்னுல் "இணைந்த இத்தாலி" என்ற கனவு நனவாகக்கண்டு உள்ளம் பூரித்தான் மாஜினி. விக்டோ[illegible] அமைதி, மகிழ்ச்சி கிடைக்கவில்லை. இளைய

ருன். கரிபால்டி எரிமலையாக வெடித்துக்கொண்டிருந்தான். மக்களவை சரணடையத் தீர்மானித்தது.

"இத்தாலி இளைஞரே எதிர்த்துப்போராட என்னுடன் வாரீர்" என்று அழைத்தான் கரிபால்டி. பெரும் படை, மடைதிறந்தவெள்ளமெனத் திரண்டது. ஆனுல் ஆதிக்கவெறி பிடித்தோருடன் அவனுல் போரிடமுடியவில்லை. கரிபால்டி, ரிஜோடிஜினிரா என்ற அழகியதீவில் அடைக்கலம் புகுந்தான்.

இத்தாலி" என்ற சங்கம் உருவாயிற்று. இரண்டே ஆண்டுகளில் அதன் அங்கத்தவர் தொகை அறுபதினுயிரமாகக் கணக்கெடுக்கப்பட்டது. அஞ்சி நடுங்கிய ஆஸ்திரிய அரசு இளைய இத்தாலியில் சேருவோருக்கு மரணதண்டனை விதித்தது.

இத்தாலி மன்னன் இனத்தின் பேரால் மக்களுக்கு ஒருவேண்டுகோள் விடுத்தான்.

புரட்சி தோன்றும் தருணம் நெருங்கிவிட்டது. தலைமை தாங்கவா என்று அறை கூவல் விடுத்தான். ஆஸ்திரிய ஆதிக்கத்தை எதிர்க்கத் துணிவற்ற சார்லஸ் ஆர்பாட் அரசனே அடக்குமுறைகளை ஏவிவிட்டான். புரட்சியாளர்களுக்கும் சிந்தனையாளர்களுக்கும் சித்திரவதையும் கொலையும் பரிசாகக் கிடைத்தன. கரிபால்டிக்கும் மாஜினிக்கும் மரணதண்டனை விதிக்கப்பட்டது. மூன்று ஆண்டுகள் நாடுவிட்டு நாடுசென்று கொண்டிருந்தனர் இருவரும். பற்பல இன்னல்களுக்குப் பிறகு இலண்டன் வந்தான் மாஜினி. அங்கிருந்து எழுச்சியூட்டும் கட்டுரைகளை அவ்வப்போது எழுதிவந்தான்.

கரிபோல்டி தென் அமெரிக்கக்கடற்கரை ஓரத்தில் காலத்தைப்போக்கினுன். இரியோ கிராண்ட் எனு

னியின் எழுத்தால் எழுச்சி கண்டனர், இத்தாலிய மக்கள். சிறை சிந்தனையாளர்களுக்கு ஓய்வு கொடுக்கும் நிலயம். ஆனுல் அந்த ஓய்வு எதிர்காலத்திட்டங்களை புடமிடும் தீக்களமாக இருந்தது. சிறையில்—இருந்தபடி பல திட்டங்களை நாட்டு மக்களுக்காகத்தீட்டிய மாஜினி "இளைய இத்தாலி" என்ற விடுதலைச் சங்கத்தை நிறுவிடவேட்கை கொண்டான். அன்னை பூமியின் விடுதலைக்காக அந்நியரின் உதவியை நாட அவன் விரும்பவில்லை. நாட்டு மக்கள் அனைவரையுமே அதில் சேர்த்திட எண்ணினுன்.

சிந்தனைச் சிற்பியான மாஜினி பலசிறிய திட்டங்களோடு சிறையை விட்டு வெளிவந்தான் வெளியே வந்த மாஜினியை நாடு கடத்தியது அரசாங்கம். பிரான்ஸில் தஞ்சம் புகுந்த மாஜினி தனது தாயகத்தை மீட்டிடும் பாசறையை அங்கு ஆரம்பித்தான். அங்கு அவன்அச்சகமொன்றைஅமைத்தான். அந்த அச்சகமே இத்தாலியை இணைக்கும் பாசறையாக இருந்தது. அவன் இத்தாலி மக்களை எழுச்சியுற ஓயாது ஒழியாது எழுதி வந்தான். இங்குதான் இத்தாலியை விட்டுத்துரத்தப்பட்ட கரிபால்டி மாஜினியைச் சந்தித்தான், மாஜினி நாட்டின்விடுதலைக்காக ஆற்றும் பணியை நேரில் பார்த்து நெஞ்சார வாழ்த்திஞன் நாடு உரிமைவேட்கையை மறந்து துயில்கொள்ளும் போது, தான் உறங்காத உத்தமன்; விடுதலை எனும் வேள்வித் தீயை அணையாது காத்து வரும் தூண்டுகோல் என்று கரிபால்டி அவனைப்பாராட்டினுன்.

பிரான்சிலுள்ள மார்கேலில் கரிபால்டி வெற்றி கண்ட இடத்தில் வாழ்ந்த மிடத்தில் ஒழித்திருந்தான். சுதந்திரதாகம் சுடர்விட்டுப் பிரகாசித்தது. அவன் ஒழித்திருந்த நாட்டு மக்கள் உரிமைகளைப்பெற அவன் உற்ற துணையாக இருந்தான். அன்னை பூமியின் விடுதலைக்காக தென் அமெரிக்காவில் இருந்தவாறே இத்தாலியப் படை ஒன்றைத் திரட்டினுன். புதிய கொடியொன்று பட்டொளி வீசிப்பறந்தது.

1848ம் ஆண்டு ஐரோப்பா எங்கணும் எதேச்சாதிகாரத்தை எதிர்த்து மக்கள் திரண்டெழுந்தனர். மாஜி

மக்களோ விக்டர் இம்மானுவலின் முடியரசையே ஏற்பது என்று வாக்கெடுப்பில் தீர்மானித்தனர். இணைந்த இத்தாலியில் மக்களாட்சி என்ற மங்காத ஒளி விளக்கை ஏற்றிட நினைத்த மாஜினியோ அமைதியற்ற உள்ளத்துடன் பைசாநகரத்தில் உயிர் நீத்தான். தேச விடுதலைக்காக தமது உயிரைப் பணயம் வைத்த இரு மாணிக்கங்களும் உலக இளைஞர்களுக்கெல்லாம் வழிகாட்டிகளாக என்றும் இலங்குவார்கள்.


## சுதந்திரன் புதிய சந்தா விபரம்

1976ம் ஆண்டு சனவரியிலிருந்து சுதந்திரன் புதிய சந்தா (உள்ளூர்) விபரம் வருமாறு:-

- ஓர் ஆண்டுக்கு—
  (புதன், ஞாயிறு இதழ்களுக்கு) ரூபா 50-00
- அரையாண்டுக்கு— ரூபா 25-00

சந்தாப்பணத்தை காசோலையாகவோ காசுக்கட்டளையாகவோ (நேரடியாக ரொக்கமாகவோ) செலுத்தலாம்.

பணம் அனுப்பவேண்டிய முகவரி:-

நிர்வாகி
சுதந்திரன்
194 ஏ, பண்டாரநாயக வீதி
கொழும்பு-12


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# "தாயைவிடத் தமிழையே மதிக்கவேண்டும்!"
# சிவராத்திரி விழாவில் அமிர்தலிங்கம் பேச்சு!

'பெற்றதாயை நாம் எங்ஙனம் நேசிக்கின்றோமோ அதைவிட மேலாக நாம் நமது தாய்மொழியை போற்றி வளர்க்கவேண்டும். தமிழருடைய மதங்களான சைவம், கிறிஸ்தவம், இஸ்லாம் என்பன காப்பாற்றப்பட்டு பேணிப்பாதுகாக்கப்படவேண்டுமானால் தமிழ் மொழிவாழவேண்டும். பண்டைத்தமிழர்களுடைய வாழ்க்கை வரலாறுகளையும், புராண இதிகாசங்கள்சொல்லுகின்ற கர்ண பரம்பரைக் கதைகளையும் உற்றுநோக்குகின்றபோது அநீதிகளையும் அடக்குமுறைகளையும் பண்டைத் தமிழன் நெடுங்காலம் பொறுத்துக் கொண்டிருந்ததில்லையென்பதை உணரமுடிகிறது."

ஊரைதீவு அருள் நெறி மன்றத்தினர், ஊரை தீவு திறந்தவெளியில் அமைந்த "பெரியவாணர் அரங்"கில் நடத்திய மகாசிவராத்திரி விழாவில் பிரதமவிருந்தினராகக் கலந்து கொண்டுரையாற்றிய தமிழர் கூட்டணிச் செயலாளர் நாயகம் திரு. அ. அமிர்தலிங்கம் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மன்றத்தலைவர் திரு. எஸ். கே. ஸ்ரீஸ்கந்தராசா தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில் மன்றக்கொடியை ஊர்காவற்றுறைத் தொகுதி தமிழ் இளைஞர் பேரவைத் தலைவர் திரு. எஸ். கே. மகேந்திரன் ஏற்றிவைத்தார்.

திரு. கா. பொ. இரத்தினம் எம். பி. குத்துவிளக்கேற்றி விழாவை ஆரம்பித்து வைத்துப் பேசுகையில் சமய நம்பிக்கைகள் குறையுமானால் சமுதாயத்தில் அமைதியின்மையும் அருவருப்பான செயல்களும் மலியும் என்றும் சமயம் பற்றியும் மொழிபற்றியும் மக்கள் மத்தியில் தெளிவான சிந்தனைகளை வளர்க்கவேண்டியது இளைஞர் கடமையென்றும் குறிப்பிட்டார்.

உடுவில் எம். பி. திரு. வி. தர்மலிங்கம் பேசுகையில் சமயங்கள் காட்டுகின்ற பாதையில் சமுதாயம் நடைபோடுமாகவிருந்தால் சமதர்ம நோக்கும் சற்குணங்களும் நிறைந்ததாக சமூகம் மிளிர முடியும் என்றும் சமயங்களும் மொழியும் பிரிக்க முடியாத அளவுக்கு பின்னிப் பிணைந்தவை என்பதை இளைஞர்கள் உணர்ந்து செயற்படவேண்டும் என்றும் குறிப்பிட்டார்

திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் பேசுகையில் தாய்ப் பாலோடு தம் பிள்ளைகளுக்கு தாய்மார் தமிழ் உணர்வையும் ஊட்ட வேண்டுமென்றும் இனம் மொழி சமயம் சம்பந்தப்பட்ட எந்தக் கருமத்தினதும் வெற்றி தாய்மார்களினது கைவிலேயே தங்கியுள்ளது என்றுக்குறிப்பிட்டார்.

திரு. எஸ். கே. மகேந்திரன் தலைமையில் 'தாயா தாரமா' சிறந்தது என்ற தலைப்பில் பட்டிமன்றமும் இடம்பெற்றது. இவ்விழாவில் திருவாளர்கள ஐ. த. தவகுமார் வி எஸ். சிவலிங்கம் க. மகாலிங்கம் க. சரவணபவன் ஐ. குலேந்திரன் க. ஜெயபாலன் அனலை ஆறு. இராசேந்திரம் சு. குணரத்தினம் ஆகியோர் உட்படப் பலர் உரையாற்றினர். ஊரை தீவு தமிழ் மாதர் கழகத்தினரின் 'தெய்வம் தந்த பரிசு'யாழ் சண்டிக்குளி நாடக கலா மன்றத்தினரின் "அடங்காப் பிடாரி" ஆகிய நாடகங்களும் கலை-நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. விழாக்குழுத் தலைவர் திரு. கா. கந்தசாமி நன்றி தெரிவித்துப்பேசினார்.

## சாதியொழிப்புக்...

—6-ம் பக்கத் தொடர்

மாற்றூர்க்கு அடிமைப்பட்டிருக்கும் நாங்கள் எமக்குள்ளேயே அடிமைமுறையைப் போன்ற சாதி வேறுபாடுகளை வைத்திருந்தால் நாம் ஒற்றுமையாக எமது இன விடுதலைக்குப் போராடுவது எப்படி? எவர் எதை எவ்வாறு கூறினாலும் நாம் தமிழ் இளைஞர்கள் ஒன்றிணைந்து ஒரு இயக்கமாக அமைத்து சாதிமுறையினை ஒழித்துக் கட்டல்வேண்டும்!

## தலைவரானார்

பருத்தித்துறை தொகுதியின் தமிழ் இளைஞர்பேரவை மத்திய குழுவின் தலைவராக புதிய சட்டத்தரணியாக விரைவில் சத்தியப் பிரமாணம் செய்யவிருக்கும் திரு. கனகமனோகரன ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளார். இதன் செயலாளராக எம். பாலகிருஷ்ணன் தெரிவுசெய்யப்பட்டுள்ளார். நிர்வாக சபையும் தெரிவுசெய்யப்பட்டது. இக்கூட்டத்தில் பருத்தித்துறை பா. உ. திரு. க. துரைரத்தினமும் கலந்து கொண்டார்.

4வது வாரம்!
செல்லமகால்
மனைவி தன் கணவனுக்கும் கணவன் தன் மனைவிக்கும் தங்களைப் பற்றிய இரகசியங்களை வெளியிடாமலிருக்கலாமா இதனால் துன்பப்படுவது யாா? என்ற வாழ்க்கையின் தத்துவத்தை சித்தரிக்கும் மாது.
மயங்குகிருள் ஒரு மாது
முத்துராமன், சுஜாதா, தேங்காய் —நடித்த
பின்னணி: வாணி ஜெயராம், பாலசுப்பிரமணியம், ஜேசுதாஸ்

ரீகல் நுவரெலியா
முத்துராமன், கே. ஆர். விஜயா —நடித்த
தீர்க்கசுமங்கலி

4-வது வாரம்
நெல்சன் திருமலை
கல்யாணமாம் கல்யாணம்

தம் பொருள் என்பதம் மக்கள். அவர்பொருள் தம் தம் வினையான் வரும் என்பதனை விளக்கும் படம்.
2-வது மாதம்
கெபிட்டி
ரீகல் (மட்டு நகர்)
சிவகுமார், தேங்காய் ஸ்ரீனிவாசன், ஜெயசித்ரா, மனோரமா நடித்த
கண்மணி ராஜா

பிளாசா
சிவாஜி - கே. ஆர். விஜயா —நடித்த
நெஞ்சிருக்கும் வரை

2வது வாரம் கெப்பிட்டல்
முத்துராமன், மஞ்சுளா, ஜயந்தி, சுந்தரராஜன் நடித்த--
ஜெமினியின்
எல்லோரும்நல்லவரே

கிங்ஸ்லி (கொழும்பு) வெலிங்டன் (யாழ்நகர்)
ஏ. வி. எம். ராஜன், லட்சுமி —நடித்த
புகுந்த வீடு

12ம் திகதி முதல்
கிங்ஸ்லி — பிளாசா
சிவகுமார், கமலாஹஸன், ஜெயசுதா —நடித்த
மேல்நாட்டு மருமகள்
(கலர்)

இப்பத்திரிகை சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட் [illegible] கொழும்பு—13 பண்டாரநாயக்க வீதி, 194 ஏ, இலக்கத்தில் 1976—ம் வருடம் மார்ச் மாதம் 7-ந் திகதி [illegible] பதிப்பிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org